வருமான வரித்துறை

வழங்கும

# மோட்டுபத்லூ
மற்றும்
# வரிதேவதை




நான் தான் வரி தேவதை. என்னால்
மாயாஜாலம் செய்ய முடியும். நீங்க எவ்வளவு வருமான வரி
செலுத்த வேண்டும் என்பதை, தகுந்த ஆதாரத்துடன் நான்
சொல்வேன். தேசத்தின் முன்னேற்றம் என்று வரும்போது
நான் எப்போதும் முன்னோடியாக இருக்கிறேன் "வருவாயே
ஆட்சியின் ஆதாரம்" என்பதே தேசத்தின் வெற்றிக்கான மந்திரம்.





மோட்டு பத்லூ மற்றும் வரிதேவதை
கருத்துருவாக்கம் - வருமான வரித்துறை இயக்குநரகம் (PR, P&P), மயூர் பவன், புது தில்லி
ஆஹா அருமை! சுட ச் சுட சூடான சமோசா . சுவையா இருக்கு. நீ என்ன சொல்கிறாய் பத்லூ?
எண்ணம் பிரமாத ம் தான், ஆனா சட் டைப் பையிலே போ துமான பணம் இல்லப்பா, மிச்சம் மீதியை எல்லாம் வைத்து தான் நான் வருமான வரியை கட்டியாகணும்.
அதை நாம் பார்த்துக் கொள் வோம். ஆனால், வெறும் வயிற்றில் இருந்தேன்னா என் மூளை வேலை செய்யாது என்பது உனக்கு ஏற்கனவே தெரியும் இல்லையா?.
ச்சப். ச்சப். ச்சப்.


ஏப்பம்
ஓ, சமோசா ரொம்பவே அருமை
இந்தாங்க உ ங்க பில், 100 ரூபாய் மட்டும் தான்
100 ரூபாயா? எப்படிப்பா?
நான் வருமானவரி செலுத் தாமல் வரி ஏய்ப்பு செய்வ துமில்லை. அதே போல என் சமோசாவின் தரத்தை நான் குறைப்பதுமில்லை.
வரி, வரி, வரி. உ ப்ப்ப்.. எல்லாவற்றுக்கும் நாம் ஏன் வரி கட்ட வேண்டும்? ப்பூப்பூபூ..
நண்பா, நம்ம சட்டைப் பை காலி ஆகிவிட்டது.\ வா வீட்டுக்கு போகலாம்... ப்பூபூபூ..



பத்லூ, ஒரு பக்கம் வரும
ான வரியோட தொல்லை,
இன்னொரு பக்கம் மூக்கு முட்ட
சமோசா சாப்பிட்டதால்
எனக்கு தூக்கம் தூக்கமாக
வருகிறது.
அப்போ, போய் தூங்கு.
நாளை வேலையில் சேர்வதற்கு
தயாராக இரு இல்லையெ
ன்றால்சம்பளத்திலிருந்து
விடுப்பு வரி பிடிக்கப்படும்.


ZzzZzzzZ



ரீம்,
ச்சும்ச்சும்
பம்ம்.
வரி தேவதையின்
மாயாஜாலத்தில்
அதிசயம்
இருக்கிறது.


ஹேய்! வரிதேவத ையே, நீ எங்களை எங்கே கூட்டிக்கொ ண்டு\ போகிறாய்?
நான் தான் வரிகளின் தேவதை. என்பேரு வரிதேவதை.
அட! இப்போதெல்லாம் வருமான வரித்துறையில் தேவதைகளை கூட வேலைக்கு வைத்திருக் கிறார்கள் போல் இருக்கிறது.
கொஞ்சம் நினை த்துப் பாருங்க, நாம் வருமான வரிசெலுத்த தேவையில்லை என்றால் நம்ம வாழ்க்கை எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும்.
நீ ஒரு தேவதை... உ னக்கு மாயாஜாலம் தெரியும். அப்போ நீ ஏன் எங்கள் மீது வரிகளை விதிக்கிறாய்?.
ரீம், ச்சும்ச்சும்.. பம்ம். உங்கள் எண்ணங்கள் தவறானவை..



வருமான வரி இல்லையென்றால் உங்கள் வாழ்க்கை எப்படி இருக்கும் என்று பார்க்கி றீர்களா?
நிச்சயமாக, அரசாங்கம் எங்களிடமிருந்து வருமான வரி வசூலிப்பதை நிறுத்தினால், நாங்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக இருப்போம்..
சரி, அப்படியானால், அசாதாரணமான ஒன்றைக் காண தயாராகுங்கள்
SCHOOL
சாலைகள், பாலங்கள் எல்லாம் மாயமாக மறைந்து போகின்றன
பள்ளிக்கூடம் மறைந்து விடுகிறது
எல்லாமே மறைந்து விடுகின்றன
மருத்துவமனைகள் மறைந்து விடுகின்றன
HOSPITA


கொரோனா தடுப்பூசிகளும் மறைந்து போகின்றன..
கடவுளே! இந்த இடம் வெறுமையாகவும் தரிசாகவும் மாறிவிட்டது. எங்கே அந்த அற்புதமாக போடப்பட்ட சாலைகள், எங்கே மறைந்துவிட்டன என்று ஆச்சர்யமாக உள்ளது,?
ரேஷன் கடைகளுக்கும் அந்த அழகான மேம்பாலங்களுக்கும் என்ன ஆயிற்று? ப்பூப்பூப்பூ
Buhuhu
... நம் பள்ளிகளெல்லாம் எங்கே?. நாம் எப்படி படிப்போம்?
அரசாங்க மருத்துவ மனைகளில் தான் நமக்கு சிகிச்சைகள், மருந்து மாத்திரைகள் எல்லாம் கிடைத்தது. இப்போது நாம் எங்கே போவது? ப்பூப்பூப்பூ...


வரி தேவதையே, ஏதோ பெரிய தவறு நடந்துள்ளது.. இப்போது மக்கள் கொரோனா, பிளேக், போலியோ அப்புறம் இன்னும் எதனாலெல்லாம் அவதிப்படுவார்களோ..
இது போன்ற மக்கள் நலத்திட்டங்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டால், சாமானியர்கள் வாழ்வது மிகவும் கடினமாக இருக்கும்.


இது மட்டுமல்ல மோட்டு பத்லூ, நாட்டின் பாதுகாப்பு அமைப்பு மற்றும் விண்வெளி ஆராய்ச்சியும் நிலை குலைந்து போகும் . இன்டர்நெட் இல்லாமல் வாழ முடியுமா?
வாய்ப்பே இல்லை, ஃபேஸ்புக் மற்றும் வாட்ஸ்அப் இல்லாத வாழ்க்கையை என்னால் நினைத்துக்கூட பார்க்க முடியாது
நமது பாதுகாப்பு அமைப்பு சிதைந்தால் அல்லது பலவீனமட ைந்தால், எதிரிகள் நம் நாட்டைத் தாக்குவார்கள்.


இப்போது என் கருத்தை நீங்கள் புரிந்து கொண்டீர்கள். வசூலிக்கும் வரியைக் கொண்டே நமக்காக இது போன்ற மக்கள் நலத் திட்டங்களையும் மேலும் இதர திட்டங்களையும் அரசு செயல்படுத்துகிறது.
நீங்கள் சொல்வது சரிதான், மக்கள் வருமான வரி செலுத்துவதை நிறுத்தினால், வளர்ச்சியின் அடிப்படையில் நாம் பல ஆண்டுகள் பின்னோக்கிச் செல்வோம்
மீண்டும் யோசியுங்கள்... வளர்ச்சியடைந்து முன்னேறிய இந்தியாவை காண வேண்டுமென்றால், வருமான வரியை நேர்மையுடன் செலுத்த வேண்டும்.
அதாவது, இது போன்ற அனைத்து வளர்ச்சியும் நாசமாகிவிடும். வேண்டாம் தேவதையே வேண்டாம். தயவு செய்து உனது மந்திரத்தை திரும்பப் பெற்று எல்லாவற்றையும் பழையபடி மாற்று.


நிச்சயம், எங்கள் வருமான வரியை கட்டுவோம்... அது மட்டுமில்லாமல் எங்கள் ரசிகர்களும் வரி தேவதை சொன்னதை அப்படியே கடைப்பிடிக்க வேண்டும் என்று சொல்வோம்.
தயவு செய்து, உங்கள் மாயாஜாலத்தை திரும்பப் பெற்று எல்லாவற்றையும் முன்பு போல் இருக்க செய்ய வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்...
ம்ம்ம்


ச்சம்... ச்சம் ச்சம்ச்சம். வரி தேவதையின் மாயாஜாலத்தில் அதிசயம் இருக்கிறது.
HOSPITAL
SCHOOL
இனி நமக்கு மருந்துகள் இலவ சமாக கிடைக்கும்.
ஆஹா! என்னுடைய பள்ளிக்கூடம்!
ப்பூப்பூப்பூ.. இனி இந்த நாட்டில் நான் எப்படி வாழ்வேன்?


ரீம். ச்சும் ச்சும் வரி தேவதை செல்கிறது.
கடவுளே! என்ன ஒரு பயங்கரமான கனவு கண்டேன். ஆனால், எனது கனவு ஒரு விஷயத்தை மிகத் தெளிவாக்கியது, நாம் அனைவரும் நேர்மையாக இருந்து சரியான நேரத்தில் வரி செலுத்தினால், நம் நாடு அதிக வேகத்தில் வளர்ச்சியடைந்து முன்னேறும்.
ஆகவே இனிமேல்.. வருமான வரி செலுத்துவதில் நேர்மையாக இருப்போம், மேலும், அந்த அறுசுவையான சமோசாக்களை எப்போதும் சுவைப்போம்.
முற்றும்

# புதிர்





# படத்திற்கு வண்ணம் தீட்டுங்கள்







# இதர பதிப்புகள்

மோட்டு பத்லூ மற்றும்வருமான வரியின் கதைவருமான வரித்துறை
- வலுவான தேசத்தை கட்டியெழுப்புவதில் பெரும் பங்களிக்கிறது.



Azadi Ka Amrit Mahotsav

